# 5 முயற்சி திருவினையாக்கும்

ஏறக்குறைய அறுநூறு ஆண்டுகளுக்கு முன்னர் ஸ்கொட்லாந்து தேசத்து மக்கள், தங்கள் நாட்டில் ஆங்கில அரசாட்சி தொடரக்கூடாது என்று முடிவு செய்தார்கள். தங்களைத் தாங்களே ஆண்டுகொள்ள வேண்டும் என்று விரும்பினார்கள். எனவே அந்த இரண்டு தேசங்களுக்கும் இடையே போர் மூண்டது.

ஆங்கிலேயர்சேனை ஸ்கொட்லாந்து போர் வீரர்களை மீண்டும் மீண்டும் பல முறை முறியடித்தது. அதன் பிறகு இராபர்ட் புரூஸ் ஸ்கொட்லாந்துப் படைக்குத் தலைவராக வந்தார். அவர் ஆறு முறை ஆங்கிலேயர்களுக்கு விரோதமாகப் படை எடுத்து, ஆறு முறையும் தோல்வியடைந்தார். அதன் பேரில் அவருடைய படை உடைந்து சிதறிப் போயிற்று. அவரது உயிருக்கே ஆபத்து வந்து விட்டது. உயிர் தப்பிப் பிழைக்க அவர் மறைவாகத் திரிந்தார்.

சில சமயங்களில் காடுகளில் மறைந்திருப்பார்; சில வேளைகளில் மலைப் புறங்களில் மறைந்திருப்பார்; இன்னும் சில நேரங்களில் ஏழைக் குடியானவர்களுடைய எளிய குடிசைகளில் மறைந்திருப்பார்; ஆங்கிலப் படை வீரர்கள் அவரைப் பிடிக்கப் பெரு முயற்சி செய்தார்கள். அவர் இடம் விட்டு இடம் பெயர்ந்து தப்பிப் பிழைத்தோட வேண்டியதாயிற்று.

சில நாட்கள் சென்ற பிறகு இப்படி ஓடிக்கொண்டே இருப்பதில் ஒரு பயனும் இல்லை என்று அவர் நினைத்தார். இனிமேல் செய்யக்கூடியது ஒன்றும் இல்லை என்ற முடிவிற்கு வந்தார். அன்றிரவு குடிசைக்குள்ளே வைக்கோல் பரப்பி படுக்கையில் படுத்திருந்தார். அவருக்குத் தூக்கம் வரவில்லை. தம் தோல்வியைப் பற்றியே சிந்தித்துச் சிந்தித்து மனம் வருந்திக்கொண்டிருந்தார். நெஞ்சில் நின்ற தைரியமும் ஊக்கமும் குறைந்துகொண்டே வந்தன. ‘‘இந்த நாட்டுக்கு விடுதலை கிடைக்குமா?’’ என்கிற ஐயப்பாடு அவர் உள்ளத்தில் எழுந்தது.

இரவு மெதுவாகக் கழிந்து, பொழுது விடிந்தது. ஒரு சிலந்திப் பூச்சி அவர் கண்பார்வையில் பட்டது. அது கூடு கட்டுவதற்காகக் கூரையில் ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்குத் தாவிற்று. இரு விட்டங்களுக்கு இடையே வலையைப் பின்ன, ஒரு விட்டத்தைவிட்டு மற்றொரு விட்டத்தைப் பிடிக்க முயன்றது. அப்படிப் பிடிக்க முடியாமல் தவறி விழுந்து, வாய் நூலில் தொங்கி, ஆடிக் கொண்டிருந்தது. பின்னர் முன்னிருந்த இடத்திற்கே திரும்பி வந்தது. மறுபடியும் முயன்றது. இப்பொழுதும் தவறிப்போயிற்று. மூன்றாம் முறையும் முயன்று பார்த்தது; பலனில்லை. எனினும் சிலந்திப்பூச்சி தன் முயற்சியைக் கைவிடவில்லை. நான்காம் முறையும் ஐந்தாம் முறையும் முயன்றது. காரியம் ஈடேறவில்லை. மறுபடியும் முயன்றது; மீண்டும் தோல்வியுற்றுக் கீழே விழுந்தது.

ஏழாவது முறையும் சிலந்தி முயன்றது; தன் முழுப் பலத்துடனும் வாய் நூலில் ஊசல் ஆடிற்று. இப்பொழுதும் அதற்குத் தோல்விதான் கிடைக்குமா? இல்லை; அதற்கு வெற்றி கிட்டிவிட்டது! அடுத்த விட்டத்தை அது எட்டிப் பிடித்துக் கொண்டு விட்டது.



புரூஸ் தம்மை நினைத்து வெட்கப்பட்டார். ஓர் அற்பமான சிலந்திப்பூச்சி விடாமுயற்சியைக் கைக்கொண்டு தன் காரியத்தை வெற்றியாக முடிக்குமாயின் நான் ஏன் இன்னும் முயன்று நம் காரியத்தில் வெற்றி காணக்கூடாது என்று எண்ணினார். மீண்டும் ஒரு முறை முயலத்தான் வேண்டும். இந்த முயற்சி, சிலந்தியைப் போல, அவருக்கு ஏழாவது முயற்சி. சிலந்திப்பூச்சியை நினைத்துக் கொண்டே ஊக்கத்தோடும் உறுதியோடும் மறைவிடத்திலிருந்து வெளியே வந்தார். தம் நண்பர்களை ஒருங்கு கூட்டிச் சந்தித்தார்; அவர்களுடன் கலந்தாலோசித்தார். படைகளை ஒன்று திரட்டினார். தம் திட்டத்தைப் போர் வீரர்களுக்குத் தெரிவித்தார். அவர் தீட்டிய திட்டத்தை அனைவரும் ஏற்றுக்கொண்டனர். போர் முழக்கத்துடன் அவர்கள் புறப்பட்டார்கள். இன்னும் எத்தனையோ படை வீரர்கள் அவரிடம் வந்து அவருடைய சேனையில் சேர்ந்து கொண்டனர். ஒரு பெரும் போர் மூண்டது. இந்தத் தடவை ஆங்கிலப் படை முழுத் தோல்வி கண்டு சிதறி ஓடிற்று. இராபர்ட் புரூஸ் போரில் வென்றார். ஸ்கொட்லாந்து விடுதலை பெற்றது. அதன் மக்கள் அனைவரும் வெற்றி விழாக் கொண்டாடினர். இராபர்ட் புரூஸ் ஸ்கொட்லாந்துக்கு மன்னரானார்.

## அரும்பதங்கள்

| | | |
|---|---|---|
| சேனை | - | படை |
| விரோதமாக | - | எதிராக |
| குடியானவர் | - | மக்கள் |
| ஐயப்பாடு | - | சந்தேகம் |
| ஈடேற | - | நிறைவேற |
| முறியடித்தல் | - | தோற்கடித்தல் |

### கிரகித்தற் பயிற்சி

**பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. ஸ்கொட்லாந்து நாட்டவருக்கும் ஆங்கிலேயருக்கும் இடையில் போர் மூளக் காரணம் யாது ?
2. இராபர்ட் புரூஸிற்கு ஏற்பட்ட ஐயப்பாடு யாது? அவ் ஐயப்பாடு ஏற்படக் காரணம் என்ன ?
3. இராபர்ட் புரூஸ் ஏன் மறைந்து திரிந்தார்? எங்கெங்கு மறைந்திருந்தார்?
4. இராபர்ட் புரூஸ் சிலந்திப் பூச்சியிடம் பெற்றுக்கொண்ட படிப்பினை யாது ?
5. இக்கதையூடாக ஆசிரியர் வலியுறுத்த விரும்பும் கருத்து யாது ?

## மொழித்திறன் விருத்திச் செயற்பாடு

இராபர்ட் புரூசும் சிலந்திப் பூச்சியும் எனும் கதையை முன்மாதிரியாகக் கொண்டு, சூழலில் நீங்கள் அவதானித்த பிராணியை மையப்படுத்தி கதை ஒன்று ஆக்குங்கள்.

# வேற்றுமை II

## ஐந்தாம் வேற்றுமை

விமலனில் ரூபன் கெட்டித்தனம் மிக்கவன்

இங்கு விமலன் என்ற பெயர்ச்சொல் ‘**இல்**’ எனும் உருபை ஏற்று வந்துள்ளது.

‘**இல்**’, என்பது ஐந்தாம் வேற்றுமைக்குரிய உருபாகும். அத்துடன் ‘**இன்**’ எனும் உருபும் ஐந்தாம் வேற்றுமையை உணர்த்தி வரும்.

மேலுள்ள வாக்கியத்தில் ‘**இல்**’ உருபு ஒப்புப் பொருளில் வந்துள்ளது.

ஒப்புப் பொருளோடு நீங்கல், எல்லை, ஏது என்ற பொருள்களும் ஐந்தாம் வேற்றுமையால் உணர்த்தப்படுவனவாகும்.

**நீங்கல்** : மலையில் வீழ் அருவி
**எல்லை** : இலங்கையின் வடக்கு இந்தியா
**ஒப்பு** : இராமனில் பரதன் சிறந்தவன்
**ஏது** : பாட்டில் சிறந்தவன் பாரதி

ஐந்தாம் வேற்றுமைக்குரிய சொல்லுருபுகள் :-
**இருந்து, நின்று, காட்டிலும், பார்க்கிலும், விட** ஆகிய சொல்லுருபுகள் ஐந்தாம் வேற்றுமையை உணர்த்தி நிற்கும்.

**உதாரணம் :** மரத்திலிருந்து விழுந்த கனி
அவனைக் காட்டிலும் இவன் பெரியன்.
கமலாவைப் பார்க்கிலும் சீதா புத்திசாலி
அன்வரைவிட சலீம் நல்லவன்



## பயிற்சி

பின்வரும் வாக்கியங்களில் ஐந்தாம் வேற்றுமை உருபை அல்லது சொல்லுருபை ஏற்றுள்ள சொற்கள் உணர்த்தும் பொருள்களை எழுதுக.

1. நெடுமாறன் ஓவியத்தில் முத்திரை பதித்தவனாவான்.
2. என்னைவிட எனது தம்பி நன்றாகப் பாடுவான்.
3. பாத்திமாவினது வீட்டின் பின்னால் ஆறு ஓடுகின்றது.

4. ஆசிரியர் வகுப்பிலிருந்து வெளியேறினார்.
5. விளையாட்டில் சிறந்து விளங்குவது எமது பாடசாலையாகும்.
6. இடியப்பத்தைவிட தோசையையே அதிகம் விரும்புகின்றேன்.
7. புற்றிலிருந்து பாம்பு வெளியே வந்துவிட்டது.
8. பாடசாலையின் வடக்குப் புறத்தில் கோயில் கட்டப்படுகிறது.
9. ரோஜாப் பூக்களைக் காட்டிலும் மல்லிகைப் பூக்கள் நறுமணமிக்கவை.
10. தந்தையை இழந்த கவலையிலிருந்து அவனால் மீளமுடியவில்லை.

## ஒலி வேறுபாட்டுச்சொற்கள் II

**ரகர, றகர சொற்கள்**

| | | |
|---|---|---|
| பரந்த | : | எமது ஆசிரியர் பரந்த உள்ளம் கொண்டவர். |
| பறந்த | : | பறந்த கிளி மரத்தில் சென்று அமர்ந்தது. |
| மரி | : | பிறந்தவர், மரிப்பது உலக வழக்கு. |
| மறி | : | மந்தையிலுள்ள மறி வழி தவறிச் சென்றது. |

**ரகர, றகர சொற்களும் பொருளும்**

முருகு - அழகு, தேன், தெய்வம்
முறுகு - திண்மை

திரை - அலை, திரைச்சீலை
திறை - கப்பம், அரசிறை

நரை - மூப்பு, வெளுத்தமயிர்
நறை - தேன், கள், குற்றம், வாசனை

நிரை - ஒழுங்கு, பசுக்கூட்டம்
நிறை - நிறைவு, நிறுத்தலளவு

துரு - களிம்பு, குற்றம், செம்மறியாடு
துறு - நெருக்கம்

செரு - ஊடல், போர்
செறு - வயல், கோபம்

தெரியல் - பூமாலை
தெறியல் - சிதறல்

தேரல் - தெரிந்தெடுத்தல்
தேறல் - தெளிவு, கள், தேன்

## பயிற்சி

**1.** பின்வரும் சொல் ஒவ்வொன்றையும் வைத்து தனித்தனி வாக்கியம் அமைக்குக.

**1.** புரம் :
**2.** புறம் :

**3.** பரி :
**4.** பறி :

**5.** பொருப்பு :
**6.** பொறுப்பு :

**7.** வரை :
**8.** வறை :

**9.** பொரி:
**10.**பொறி :

**2.** அகராதியின் துணையுடன் பின்வரும் சொற்களுக்கான பொருளைத் தேடியறிக.

**1.** திரை -
**2.** திறை -
**3.** மரம் -
**4.** மறம் -